ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




| வேணு : 8 | அக்டோபர் - 2002 | கானம் : 3 |
| --- | --- | --- |


www.madhuramurali.org



ஸ்ரீ ஹரி:

மாதுரிஸகீ ஸமேத

ஸ்ரீ ப்ரேமிகவரதனின்

ஒன்பதாவது வருட ப்ரஹ்மோத்ஸவம்

30-08-2002 முதல் 08-09-2002 வரை










கோவிந்த பட்டாபிஷேகம்





# மதுரமுரளி

Registered as Newspaper in India R. No. 62828 / 95

| | |
|---|---|
| Regd. No.<br>TN / Chief PMG / 156 / 2002 | Licensed to Post without<br>prepayment WPP No. 52 / 2002 |

| | | |
|---|---|---|
| வேணு : 8 | அக்டோபர் - 2002 | கானம் : 3 |




மாதுர்ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன்


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256. Editor : S. Sridhar.

visit us at www.madhuramurali.org ; e-mail : contact@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி


| வேணு : 8 | அக்டோபர் 2002 | கானம் : 3 |
|---|---|---|


## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 83 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 4 |
| 4. | வேத கதைகள் - 64 | 8 |
| 5. | ஸ்ரீரங்க மஹாத்மியம் | 10 |
| 6. | எந்தரோ மஹானுபாவுலு - 54 | 14 |
| 7. | ஸனாதனப் புதிர் - பகுதி - 18 | 16 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 58 | 18 |
| 9. | மாலே மணிவண்ணா - 1 | 20 |
| 10. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 10 | 26 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 85 | 29 |


ॐवध'ॐक्रीं ॐफभछी: □मझ'नए'नई'प्रफीटॐफभ'ध': ॐठध'ू मि'लि' ब्रीीं यनिंनम'नियङज'तित्रंड'ध'ड:

इ'टी ब'ङ्गी ए'ङैव ॐफद'पफड'द'पि □मझ'नप्रॐए': ब'नछ्ध'ीी पीीडीब'ीी दि'द' थ'फजी ड्रैभछ'ीीॐल'ॐफभ'ध':

லக்ஷ்மியுடன் இருப்பவனும், விஷ்ணுவும், ஜகத்குருவும், வேதப்பொருளும், புத்திக்கு ஸாக்ஷியாக இருப்பவனும், களங்கம் இல்லாதவனும், ஹரியும், அசுரர்களை அழிக்கக்கூடியவனும், தாமரை போன்ற கண்கள் உடையவனும், கதை, ஶங்கம், சக்ரம், நிர்மலமான வனமாலை இவற்றை தரித்தவனும், காண காண திகட்டாத ஆராவமுதனும், ஸர்வ உலகங்களுக்கும் சரண்யன் ஆனவனுமான ஸ்ரீக்ருஷ்ண பகவான் இங்கு எனக்கு தரிசனம் தரட்டும்.

- ஆதிசங்கரரின் ஸ்ரீ க்ருஷ்ணாஷ்டகம்

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : ஸாமா தாளம் : ஆதி

பல்லவி

அங்கும் இங்கும் உழலாதிரு - மனமே
கண்ணன் கழல்களில் நிலையாயிரு (அங்கும்)

அனுபல்லவி

இதுநாள் வரையில் அலைந்து அலைந்து
கண்டதென்னவோ - இதை
அன்றே அறிந்திருந்தால் ஆனந்தம் அல்லவோ (அங்கும்)

சரணங்கள்

நான், எனது இரண்டையும் விட்டுவிடு
கண்ணனிடம் உந்தனை தந்து விடு (அங்கும்)

வீணான விஸனங்களை விட்டுவிடு
கண்ணன் வசனங்களை பற்றிவிடு (அங்கும்)

பற்றற்று உலகில் பழகியிரு
முரளீதரனையே ஸதா பாடியிரு (அங்கும்)

நாமாவளி

மனமோஹன ஸ்ரீமுரளீதர
வேணுகான ஸ்ரீகோபால
ராதாலோல ராஸவிஹாரி
ரஸிகரஸிகாமணே கிரிதாரி

83

மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் ஒன்பதாவது ப்ரஹ்மோத்ஸவம் வழக்கம்போல் இந்த வருடமும் நமது மதுரபுரி ஆஶ்ரமத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. நந்தோத்ஸவம், கோவிந்த பட்டாபிஷேகம், ராதாகல்யாணம், பாகவத பாராயணம், வாஹனங்களில் புறப்பாடு, தினமும் திவ்யநாம ஸங்கீர்த்தனம்— எல்லாம் வழக்கம் போல் நடைபெற்றன.

நீங்கள் ''மெலட்டூர் பாகவத மேளா'' என்று கேள்விப்பட்டு இருப்பீர்கள். அதிலும், அவர்களது 'ப்ரஹ்லாத விஜயம்' என்ற நாட்டிய நாடகம் மிகவும் ப்ரஸித்தமானது. இந்த முறை, நமது உத்ஸவத்தில் அவர்களது 'ப்ரஹ்லாத விஜயம்' நாடகம் நடந்தேறியது. எல்லோரும் மிகவும் ரசித்தார்கள். நாட்டிய நாடகம் மிகவும் தத்ரூபமாக இருந்தது. நிகுஞ்ஜோத்ஸவத்தில் கசரவல்லி ஸகோதரிகளின் ஸங்கீத கச்சேரி பகவத் அர்ப்பணமாக இருந்தது. ஜானவாஸம், ராதாகல்யாணம், பவ்வளிம்பு, விடையாற்றி மற்றும் ஆஞ்சநேய உத்ஸவத்துடன் ப்ரஹ்மோத்ஸவம் இனிதே நிறைவடைந்தது.

வெளியூர்களிலிருந்து பல பக்தர்கள் கலந்துகொண்டு பகவத் க்ருபைக்கு பாத்திரமானார்கள். கலந்துகொண்ட அனைவரும் ஆஶ்ரமத்தில் எங்கும் ஸாந்நித்யத்தை எளிதில் உணர முடிகிறது என்று கூறினார்கள். ஆஶ்ரமத்திற்குள் நுழைந்தவுடனேயே மனதில் சாந்தி நிலவுவதாக அனைவரும் கூறினார்கள்.

ஒரு முறை, ஆஶ்ரமத்தில் நம் ஸ்வாமிகள் தியானம் செய்து கொண்டிருக்கையில் தனக்கு ஒரு திவ்ய காட்சி ஏற்பட்டதை என்னிடம் கூறினார்கள். அதில், ஸாக்ஷாத் ராதாதேவி, நீலவண்ண பட்டுப்பாவாடை அணிந்துகொண்டு ஆஶ்ரமத்திலுள்ள பூச்செடிகளை எல்லாம் தன் கையினால் தடவிக்கொடுத்துக்கொண்டே அங்கும் இங்கும் உலவியதாக கூறினார்கள். இந்த முறை ஆஶ்ரமத்தில் எங்கும் ஸாந்நித்யம் நிறைந்திருப்பதாக அனைவரும் கூறியபொழுது எனக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் கூறிய அந்த காட்சிதான் நினைவுக்கு வந்தது.

(தொடரும்) – **ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

கேள்வி : இன்று எவ்வளவோ போலி ஸ்வாமிகள் எல்லாம் இருக்கின்றார்கள். இவர்களையெல்லாம் அடையாளம் கண்டு எப்படியாவது இவர்களை எல்லாம் விலக்கி வைக்க முடியாதா?

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஒரு ஸமயம், வட இந்தியாவில் காஞ்சிப்பெரியவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் முகாமிட்டிருந்த பொழுது, அப்பொழுதைய ப்ரதமமந்திரி இந்திராகாந்தி அவரை தரிசனம் செய்ய வந்தார்.

நீங்கள் சொல்வது போலவே பாரத ப்ரதமரும், ஸ்ரீ பெரியவர்களிடம், ''மக்களை ஆன்மீகம் என்ற பெயரில் தவறான வழியில் அழைத்துச் செல்பவர்களை நீங்கள் அடையாளம் காட்டினால் அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கிறேன்'' என்று சொன்னார். ஸ்ரீ பெரியவர்கள் சிரித்துக்கொண்டே, ''அப்படியெல்லாம் செய்யக்கூடாது. ஒரு காலகட்டத்தில் அவர்களை அண்டுபவர்களே அவர்களது பரிபக்குவத்தைப் பற்றி நன்றாகப் புரிந்துகொள்வார்கள்'' என்று கூறினார்கள். அப்பொழுதும் இந்திராகாந்தி திருப்தி அடையவில்லை என்று ஸ்ரீ காஞ்சி பெரியவர்கள் புரிந்துகொண்டார்கள்.

பெரியவர்களிடம் யாரோ ஒருவர் ஒரு கூடை நிறைய மாம்பழங்கள் கொண்டு வந்திருந்தார். அவற்றுள் பல காய்களும், பல செங்காய்களும், ஓரிரு பழங்களும் இருந்தன. பெரியவர்கள் வெளியில் தரிசனத்திற்கு வந்திருப்பவர்களிலிருந்து ஒரு குழந்தையை அழைத்து வரும்படி பணித்தார்கள். சுமார் 5 வயதிருக்கும் குழந்தை ஒன்று அவ்விடம் அழைத்து வரப்பட்டது. பெரியவரும் சிரித்துக்கொண்டே அந்த குழந்தையிடம் கூடையைக் காண்பித்து, ''உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்'' என்றார்கள். அந்தக் குழந்தையும் கூடையில் தேடி நன்றாகப் பழுத்த மாம்பழத்தை எடுத்துக்கொண்டது.

ஸ்ரீ பெரியவர்கள் அதைப் பார்த்துக்கொண்டிருந்த இந்திராகாந்தியிடம், ''ஒரு சிறிய குழந்தை, எது பக்குவமானது, எது பக்குவமற்றது என்று எப்படித் தெரிந்துகொள்கின்றதோ, அதுபோல், உண்மையைத் தேடுபவர்கள் ஒரு காலகட்டத்தில் உண்மையான மஹான்களை அறிந்துகொள்வார்கள்'' என்றார்கள்.

கேள்வி : பரம வேதாந்தியான ஆதிசங்கர பகவத்பாதாள் தனது ஸ்தோத்திரங்களின் முடிவில் காம்யமாக, ''இதைப் பாடினால் தரித்திரம் போகும், இதைப் பாடினால் ஐய்ஶ்வர்யம் வரும்'' என்றெல்லாம் பலஸ்துதி பாடியுள்ளாரே, அதற்கு என்ன காரணம்?

ஸ்ரீ ஸ்வாமிகள் : அஜ்ஞானம் என்பதுதான் உண்மையான தரித்திரம். ஞானம் தான் உண்மையான ஐய்ஶ்வர்யம். ஆகவே, அவரவர்கள் மனதில் எதை உத்தேசம் செய்து பாராயணம் செய்கிறார்களோ, அது நிறைவேறும்.

கேள்வி : ப்ரஹ்மசாரிகள் பலாஶ மரத்தின் குச்சியை வைத்துக்கொள்ள வேண்டும் என்று நம் ஶாஸ்திரங்கள் கூறுகின்றனவே! இதற்கு என்ன காரணம்?

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஒரு ஸமயம், தேவர்கள் பலாஶ மரத்தின் கீழே அமர்ந்து காயத்ரீ மந்திரத்தின் மஹிமையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது காயத்ரீ மந்திரமானது மூன்று பாதங்களாக அமைந்திருப்பதைப் பற்றி அவர்கள் பேசியதைக் கேட்ட அந்த மரமானது, மூன்று மூன்றாக இலைகளைத் தோற்றுவித்து அதை வெளிப்படுத்தியது. அதைக் கண்டு அதிசயித்த தேவர்கள் பலாஶ மரத்திற்கு ''ஸுஶ்ரவஸ்'' அதாவது 'சிறந்த செவிப்புலனுடைய மரம்' என்று பெயரிட்டனர். இந்த விஷயம்,

''தேவாவை ப்ரஹ்மந்நவதந்த தத்பர்ண உபாஶ்ருணோத் ஸுஶ்ரவாவை நம''

என்று வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குருகுலத்தில், குருவிடமிருந்து வேத அத்யயனம் செய்யச் செல்லும் ப்ரஹ்மசாரி வித்யார்த்தி அவரது உபதேசத்தை பலாஶ மரத்தை போல் நன்கு கேட்டுணர்ந்து கற்கவேண்டும் என்பதற்காகத்தான் பலாஶ மரத்தின் தண்டம் அவனுக்குக் கொடுக்கப்படுகிறது. மேலும்,

அந்த தண்டத்தை கையில் வைத்திருப்பதாலேயே ஒருவனுக்கு விஷயங்களை உள்வாங்கிக்கொள்ளும் தன்மை அதிகரிக்கும்.

கேள்வி : தினமும் என்னுடைய முகத்தைக் கண்ணாடியில் பார்ப்பேன். முன்பெல்லாம் மிகவும் தேஜஸ்ஸாக இருக்கும். இப்பொழுதெல்லாம் தேஜஸ் குறைந்துவிட்டது என்று தெரிகின்றது. என்ன காரணமாக இருக்க முடியும்?

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஸ்ரீமத் பாகவதத்தில் வாமன பகவான் பலிச்சக்ரவர்த்தியிடம் கூறும்பொழுது, ''தானாகக் கிடைப்பதைக் கொண்டு ஸந்தோஷத்துடன் ஜீவனம் நடத்தும் ப்ராஹ்மணனுடைய தேஜஸ் வளருகின்றது!'' என்று கூறுகின்றார். அதாவது, அவனுடைய தேஜஸ்ஸானது நிலையாக இருக்கின்றது என்பதாகக் கூறாமல், வளருகின்றது! என்று கூறுவதை கவனிக்க வேண்டும். தேவைக்கு மேல் ஆசைப்பட்டு ஸம்பாதிப்பது, பேராசைப்படுவது இவை எல்லாம் ஒருவனுடைய தேஜஸைக் குறைத்துவிடும்.

கேள்வி : ஸமீபத்தில் நான் ஒரு உபந்யாஸத்திற்குச் சென்றிருந்தேன். உபந்யாஸம் செய்தவர் காஞ்சி ஸ்ரீ மஹாபெரியவாளைப் பற்றிப் பேசினார். உபந்யாஸம் முடிந்தவுடன், ''நீங்கள் காஞ்சி பெரியவர்களுடன் இருந்திருக்கின்றீர்களா?'' என்று கேட்டேன். அதற்கு அவர், ''அப்படி எல்லாம் இல்லை. சிலமுறை அவரை தர்சனம் செய்திருக்கின்றேன்'' என்றார். அப்படியிருக்கையில் பெரியவர்களைப் பற்றி இவர் எப்படிப் பேசலாம் என்று எனக்குத் தோன்றியது. நான் சொல்வது சரிதானே?

ஸ்ரீ ஸ்வாமிகள் : அப்படிப் பார்த்தால் இப்பொழுது நாமே ஆதிசங்கரர், ராமானுஜர், ஆழ்வார்கள், ராமக்ருஷ்ண பரமஹம்ஸர், ரமணர் மற்றும் அநேக பக்தர்களின் சரித்திரங்களை எல்லாம் பேசுகின்றோம். அவர்களை எல்லாம் நேரில் பார்த்து பழகியிருந்தால்தான் பேசலாம் என்று சொன்னால் அது ஸாத்யமா? மஹான்களைப் பற்றி பேசுவதே ஒரு ஸாதனை. அதனாலேயே சித்த ஸுத்தி ஏற்படும். ஆனால், தகுந்த ஆதாரங்களையும், க்ரந்தங்களையும் அடிப்படையாகக்கொண்டு பேச வேண்டும்.

கேள்வி : நான் தன்னலம் கருதாது பிறருக்கு ஸேவை செய்வதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளேன். அப்படி இருந்தபொழுதும் என்னைப் பலர் எதிர்க்கின்றனர். எனக்கு பலர் இடையூறுகளை ஏற்படுத்துகின்றனர். என்ன காரணம்?

ஸ்ரீ ஸ்வாமிகள் : நம்மிடம் ஒருவர் வந்து பிறரைப் பற்றிய குற்றங்கள், அவர்களைப் பற்றிய விமர்சனங்கள், அவதூறுகளைச் சொல்லும்பொழுது நாம் என்ன செய்கின்றோம்? ''ஏன் இதையெல்லாம் என்னிடம் சொல்கின்றாய்?'' என்று கேட்பதில்லையே! அதோடு மட்டும் இல்லாமல், அவற்றையெல்லாம் மிகவும் குதூஹலமாக கேட்கின்றோம் அல்லவா! நாமும் அவர்களுடன் சேர்ந்து நம் பங்கிற்கும் விமர்சிக்கின்றோம் அல்லவா?. அதுபோல்தான் நம்மைப் பற்றிய விமர்சனத்தையும் அடுத்தவர்கள் அதே குதூஹலத்துடன்தான் கேட்பார்கள். பொதுவாக உலகமக்களின் போக்கு என்பது எந்த நிர்ணயத்திற்கும் உட்படாதது. நீங்கள் அவர்களுக்கு நன்மை செய்வதற்காக வந்த போதிலும், நன்றியுடன் இருக்கமாட்டார்கள்; புகழமாட்டார்கள்; அன்புடன் நடந்துகொள்ளமாட்டார்கள்; ஒத்துழைக்கமாட்டார்கள். மாறாக உங்களைத் தூற்றுவார்கள்; எதிர்ப்பார்கள்; அவதூறு பேசுவார்கள்; இடையூறுகளை ஏற்படுத்துவார்கள்; உங்கள் காரியங்களுக்கு உள்நோக்கம் கற்பிப்பார்கள். உண்மையில் ஸேவை மனப்பான்மை இருந்தால் இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டுதான் செய்ய வேண்டும்.

கேள்வி : தமிழ்நாட்டில் கிராமங்களில் உள்ள ஒவ்வொரு குளக் கரையிலும் ஒரு அரசமரம் உள்ளதே. அதற்குக் காரணம் என்ன?

ஸ்ரீ ஸ்வாமிகள் : சாஸ்திரத்தில் அரசமரத்தினுடைய நிழல் விழும் தீர்த்தத்தில் (குளத்தில்) நீராடுவது என்பது மிகவும் புண்யமானதாக சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவேதான் இதை அறிந்த நம்முடைய பெரியோர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் குளக்கரையில் அரசமரத்தை வைத்திருக்கின்றனர்.

# வேத கதைகள் - 63

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## அரணிக்கட்டை கடைதல்

தேவ லோகத்தில் இந்திரனுடைய ஸபையில் அப்ஸர ஸ்த்ரீகள் பலர் உள்ளனர். அவர்களுக்குள் ஊர்வசி மிகவும் அழகானவள். ஒரு ஸமயம் புதனின் பிள்ளையான புரூரவஸ் என்ற அரசன், ஊர்வசியைக் கண்டான். அவள் அழகில் மயங்கி அவளை அணுகி தனக்கு மனைவியாக இருக்குமாறு வேண்டினான். அவளும் அவன் அழகில் மயங்கி ஒப்புக்கொண்டாள். ஆனால், சில நிபந்தனைகள் விதித்தாள். ''எனக்கு நெய்தான் ஆகாரம். இரண்டு ஆடுகளை பிள்ளைகளாக நினைத்து அவைகளை நான் வளர்க்கிறேன். அவைகளை பாதுகாக்க வேண்டும். உடை அணியாத கோலத்தில் உன்னை நான் பார்க்க மாட்டேன். இந்த நிபந்தனைகளில் ஒன்று குறைந்தாலும் நான் உன்னை விட்டு விலகி விடுவேன்'' என்றாள். அரசனும் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு அவளை மணந்து மகிழ்ந்தான்.

ஊர்வசி பூலோகம் சென்று விட்டதால் தேவலோகமானது முன்போல் விளங்கவில்லை. அதனால் எந்த உபாயத்தைப் பின்பற்றியாவது, ஊர்வசியை அழைத்து வருமாறு தேவேந்திரன் தேவர்களுக்கு உத்தரவிட்டான். தேவர்கள் பூலோகம் சென்று ஊர்வசி, புரூரவஸ், இவர்கள் தனிமையாக இருக்கும்பொழுது, ஊர்வசியின் வளர்ப்பான ஆடுகளை திருடிச் சென்றார்கள். இதை அறிந்த ஊர்வசி அலறினாள். திருடர்களைத் துரத்தி ஆடுகளைக் கொண்டு வருமாறு ஏவினாள். அரசன் அந்த ஸமயம் சரியாக ஆடையை அணியவில்லை. உடன் தேவர்கள் வெளிச்சத்தைத் தோற்றுவித்தார்கள். ஆடை இல்லாத அரசனைக் கண்டு ஊர்வசி தேவலோகம் சென்றாள்.

அரசன் ஊர்வசி மேலிருந்த மயக்கத்தால் அவளைத் தேடி அலைந்தான். அவ்வாறு தேடும்பொழுது ஒரு புண்ய தீர்த்தத்தில்

அவளைக் கண்டு (அயே ஜாயே திஷ்ட திஷ்ட என்று) கதறிக்கொண்டு அவளை அணுகினான். அவள் மறைந்தாள். உடன் அரசன் அரணிக் கட்டைகளை எடுத்து வந்து கடைந்தான். அவ்வாறு கடையும்பொழுது ஆபு: என்ற பிள்ளை அதில் தோன்றினான். இதைப் பின்பற்றியே யாகங்களும் அரணிக்கட்டையைக் கடையும்பொழுது கீழ் அரணியை உர்வச்யஸி என்றும், மேல் அரணியை புரூரவா: என்றும் சொல்லி கடைகிறார்கள். இது யஜுர்வேதத்தில், ''உர்வச்யஸி ஆயுரஸி புரூரவா:'' என்ற மந்திரம் இவைகளை விளக்குகிறது. இந்த ஊர்வசி வரலாறு ரிக்வேதத்திலும் விஸ்தாரமாக உள்ளது. அங்கு தான் ''அயே ஜாயே திஷ்ட திஷ்ட,'' என்ற மந்திரம் இருக்கிறது. இவ்விதம் ஊர்வசி உபாக்யானம் யஜுர் வேதத்திலும் ரிக் வேதத்திலும் உள்ளது.

## அறிவிப்பு

நமது மிஷன் சார்பில் ஜுலை '95 முதல் ''மதுரமுரளி'' நம்மை ஆன்மீக பாதையில் அழைத்துச் செல்கிறது. ஜுன் 2002ல் மதுரமுரளி ஆரம்பித்து ஏழு ஆண்டுகள் நிறைவடைகின்றது. சந்தாதாரர்கள் தங்களின் சந்தாவை புதுப்பித்துக்கொள்ள அழைக்கின்றோம்.

உள்நாடு : ஆண்டு சந்தா ரூ. 60/-
மூன்றாண்டு சந்தா ரூ. 180/-
ஆயுள் சந்தா ரூ. 750/-

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ. 300/-

உலோகமான இரும்பில் குளிர்ந்த காற்று பட்டவுடன் அதில் துரு உண்டாகும். இரும்பிலிருந்து உற்பத்தியான அந்த துரு சிறிது சிறிதாக அந்த இரும்பையே அழித்துவிடும். அதுபோல், நம்முடைய மனதில் குருநாதரின் க்ருபை என்ற குளிர்ந்த காற்றுபட ஆரம்பித்தவுடன் பக்தி உண்டாகி காலக்ரமத்தில் அந்த பக்தியே அந்த மனதை நாசம் செய்துவிடும்.

- ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்

# ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளிச்செய்த திவ்யதேச வைபவம் க்ரந்தத்திலிருந்து ''ஸ்ரீரங்க மஹாத்மியம்''

1. ஸ்ரீரங்கம் என்பது மஹாக்ஷேத்ரம். இங்கு ஹரியின் நித்ய ஸாந்நித்யம் இருந்து வருகிறது. ஞானிகளே ஸாக்ஷாத்கரிக்கக்கூடிய பரமாத்மாவை இங்கு அஜ்ஞானிகள் கூட பார்க்கின்றனர்.
2. வைகுண்டத்தை விட்டு ஜகதீஶ்வரனான வாஸுதேவன் ஸ்ரீரங்கம் வந்து ஸாந்நித்யத்துடன் விளங்குகிறார்.
3. ஸர்வேஶ்வரனான ஹரி, பயங்கரமான ஸம்ஸார ஸாகரத்திலிருந்து ஜீவன்களைக் கரையேற்ற வேண்டி காவேரி மத்தியில் வந்து பள்ளிகொண்டிருக்கிறார்.
4. ஒரே பக்கமாய் படுத்திருப்பதென்று ஸத்யாக்ரஹம் செய்து கொண்டு ஸகல ஜீவன்களையும் கரையேற்ற வேண்டி யோகநித்ரை செய்கிறார்.
5. ஶரணாகதவத்ஸலனும், க்ருபாஸிந்துவுமான அவரைவிட்டு மக்கள் வீணாக கஷ்டப்படுகின்றனர்.
6. ஸ்ரீரங்கத்தை மறந்து இந்த கலியில் ஸம்ஸாரத்தில் அலையும் மக்களுக்கு ஐயோ! துக்கம்.
7. ஸ்ரீரங்கத்தை ஆஶ்ரயித்து அவன் திருவடிநிழலிலேயே வாழ்பவர்களுக்குத்தான் உண்மையான ஸௌக்யம். அவர்களே பாக்யசாலிகள்.
8. என்ன தைர்யம் இவர்களுக்கு? ஸ்ரீரங்கநாதர் எதிரில் இருக்கும்பொழுது கூட ஸேவிக்காமல் போகின்றனரே! என்ன துர்பாக்யம்!!
9. மஹாபாவியாக இருந்தாலும் எதிர்பாராமல் ஸ்ரீரங்கம் வந்தவனுக்குக்கூட யமபயம் கிடையாது.

10. வேறு தேசம் சென்றுவிட்டாலும், வேறு தீவுக்குச் சென்றுவிட்டாலும், ஸ்ரீரங்கத்தின் திசை நோக்கி ஸேவித்தால் துன்பம் வராது.
11. திருவரங்கன், திருவரங்கம் என்று விளையாட்டாகவோ ஏளனமாகவோ சொன்னாலும்கூட அவனுக்கு கால பயமில்லை, நரகபயம் இல்லை.
12. ஸ்வர்கத்தைக் காட்டிலும். ப்ரஹ்ம லோகத்தைக் காட்டிலும், வைகுண்டத்தைக் காட்டிலும் ஸ்ரீரங்கவாஸம் அரிது.
13. வைகுண்ட பார்ஷதர்கள்கூட மஹோத்ஸவம் பார்க்கும் ஆசையால் ஸ்ரீரங்கம் வருகின்றனர்.
14. தேவர்களும், பித்ருக்களும், ஸித்தர்களும், வித்யாதரர்களும் ஸ்ரீரங்கநாதரை நித்யமும் தரிசனம் செய்யும் ஆசையால் ஸ்ரீரங்க வாஸத்தை விரும்புகின்றனர்.
15. ஸ்ரீரங்கவாஸ மாத்திரத்தினால் ஒருவனுக்கு கைங்கர்யம் கிடைத்துவிடும். அவன் தொண்டர் குழாத்தில் ஒருவனாகச் சேர்ந்துவிடலாம்.
16. ஸ்ரீரங்கநாதன் நினைத்தால்தான் இங்கு (ஸ்ரீரங்கத்திற்கு) வரமுடியும். அவர் அனுப்பினால்தான் இங்கிருந்து போகமுடியும். ஸ்ரீரங்கத்திற்கு வருவதும் போவதும் அவர் இஷ்டம். நம் முயற்சியால் நடக்காது.
17. ஸ்ரீரங்கநாதன் அருளிருந்தால், பாபிகளுக்குக்கூட ஸ்ரீரங்கவாஸம் கிடைத்துவிடும்.
18. ஆனால், மஹாத்மாக்களான யோகிகள்கூட ஸ்ரீரங்கத்தைவிட்டு வேறு எங்கேயாவது அலைந்துகொண்டிருக்கிறார்கள்.
19. ஸதாசாரம் உள்ளவனாயினும், துராசாரம் உள்ளவனாயினும் ஸ்ரீரங்கத்தில் வஸிப்பவன் பாக்யவான்.
20. திருடுவதற்காகவோ, கள் குடிப்பதற்காகவோ, பரஸ்த்ரீ ஸங்கமத்திற்காகவோ ஸ்ரீரங்கம் வந்தாலும் பாக்யவான்.
21. வைதீகர்களும், வைஷ்ணவர்களும், ப்ராஹ்மணர்களும் ஸ்ரீரங்கனுக்கு கைங்கர்யம் செய்துகொண்டு இங்கு வஸிக்கும் பாக்யத்தைக் கேட்கவும் வேண்டுமா?

22. பல க்ஷேத்ரங்களைச் சுற்றி மக்கள் மனதில் நிம்மதியில்லாமல் ஸ்ரீரங்கம் வந்து நிம்மதியும் மகிழ்ச்சியும் பெறுகின்றனர்.

23. ஓ மக்களே! சீக்கிரம் வாருங்கள்! சேஷ சயனத்தில் பள்ளி கொண்டிருக்கும் பெருமாளைப் பாருங்கள்! பாருங்கள்!

24. மனிதர்களே! நீங்கள் தீர்த்த யாத்திரை, தவம் எல்லாம் செய்தது போதும்; ஸ்ரீரங்கம் வந்து பெரிய பெருமாளைப் பாருங்கள்.

25. ஸ்ரீரங்கத்திற்கு நிகரான க்ஷேத்ரம் மூவுலகிலும் இல்லை. ஸ்ரீரங்கநாதருக்கு நிகரான தெய்வம் இல்லவே இல்லை.

26. ஆஹா பாக்யம்! ஆஹா பாக்யத்தின் மேல் பாக்யம்! ஊனக் கண்ணால்கூட ஸ்ரீரங்கத்தில் ப்ரஹ்மத்தைப் பார்க்க முடிகிறது.

27. ஸ்ரீரங்கநாதரைக் கண்டும் ஒரு ப்ரதிமை என்று நினைப்பவன் பாபி. அவன் நரகத்தைத்தான் அடைவான்.

28. இது சிலாமயமான சில்பமில்லை. பஞ்சலோகமும் இல்லை. இது சின்மயமான ரூபம். ஞானக்கண்ணால்தான் பார்க்க முடியும்.

29. வரம் தரும் க்ருபாளுவான ஸ்ரீரங்கநாதர், வரும் பக்தர்களை க்ஷேமம் விசாரிக்கிறார். வேண்டியதைத் தருகிறார்.

30. ஸ்ரீரங்கத்தில் வஸிக்கும் பசு, நாய், கழுதை, பன்றி முதலிய மிருகங்கள்கூட பாக்யம் செய்தவை. அவைகளை தேவர்களும் கொண்டாடுகின்றனர்.

31. காக்கை, கிளி, குயில், மயில் முதலிய பக்ஷிகளும் ஸ்ரீரங்க வாஸத்தினால் பாக்யம் செய்தவை.

32. கோடி ஜன்ம புண்யம் செய்தால்தான் பகவான் ஸ்ரீரங்க வாஸத்தை தருகிறான். அவனே சுதந்திரன்.

33. காவேரி ஸ்நானம் செய்துகொண்டு ஸ்ரீரங்கநாதரை தரிசனம் செய்துகொண்டு ஸ்ரீரங்க க்ஷேத்ரவாஸம் செய்பவர்கள் மஹாபாக்யவான்கள்.

34. வைகுண்டமே ஸ்ரீரங்கம். அதில் சந்தேகமில்லை. இது ஸ்தூலரூபமாகக்கூட காணப்படுகிறது.

35. ஸ்ரீரங்க மஹாத்மியம் சொல்லி மாளாது. எனது வாக்கு தூய்மைக்காக ஏதோ கொஞ்சம் சொன்னேன்.

36. ப்ரஹ்மாவினாலும், ஸரஸ்வதியாலும், ஆதிசேஷனாலும் கூட ஸ்ரீரங்க மஹாத்மியம் சொல்லி மாளாது.

37. ஸ்ரீரங்க மஹாத்மியம் படிப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் பாவனமானது, மங்களமானது.

38. படிப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் ஸ்ரீரங்க மஹாத்மியம் ஆயுளையும், ஆரோக்யத்தையும், புத்திரலாபத்தையும், சுக வாழ்வையும் தரவல்லது.

39. துலா மாதத்தில் காவேரி ஸ்நாநம் செய்துகொண்டு ஸ்ரீரங்கத்தில் வசித்துக்கொண்டு தினமும் ஸ்ரீரங்க மஹாத்மியம் கேட்க வேண்டும்.

40. பவித்ரமான புண்ணியமான இந்த ஸ்ரீரங்க மஹாத்மியத்தைக் கேட்பவன் ஸ்ரீரங்கநாதரின் திருவருள் கைகூடி ஸம்ஸார பாசத்திலிருந்து விடுபட்டு வைகுண்டமே போவான்.

---


Visit us at www.madhuramurali.org for

1. Detailed photographic reports of major mission / satsang events viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English / Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures / essays / sayings / kirtans
5. Articles on religion, philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama..........." Mahamantra chanting rendered in various raagas & Video footage.

# எந்தரோ மஹானுபாவுலு - 54

கோரமான பாபங்களைச் செய்யும் ஜகாயி, மதாயி என்ற ஸஹோதரர்களின் மீது காரணமின்றி ஸ்ரீ நித்யானந்தருக்கு க்ருபை பெருகியதால் அவர்களை உத்தாரணம் செய்யவேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. அந்த க்ஷணமே அவர்களது பாபங்களின் குவியலுக்கு அழிவு நேரம் ஆரம்பித்தது. என்று அவர்கள் நித்யானந்தரையும் ஹரிதாஸரையும் ஸந்தித்தனரோ, அன்றே அவர்கள் தங்களது இருப்பிடத்தை மஹாப்ரபுவின் க்ருஹம் இருந்த தெருவுக்கு மாற்றிக்கொண்டனர். தெருவில் அனைவரும் நடுங்கினர். இனி நாமஸங்கீர்த்தனம் செய்பவர்களுக்கு ஆபத்துதான் என்று எண்ணி அனைவரும் பயந்தனர். இந்த இரு ராக்ஷஸ ஸஹோதரர்கள் நம்மை நிம்மதியாக இரவு முழுவதும் கீர்த்தனம் செய்ய நிச்சயம் விடமாட்டார்கள் என்று வருத்தப்பட்டனர். ஏற்கனவே கீர்த்தனத்திற்கு வர அனுமதி இல்லாமல் இருந்தவர்கள், ''நல்லதாயிற்று; நாம் இனி நிம்மதியாக இரவில் தூங்கலாம்'' என்று ஸந்தோஷித்தார்கள்.

மஹாப்ரபுவின் வீடு கங்கைக்கு அருகில் இருந்தது. எந்த படித்துறையில் ப்ரபு ஸ்னானம் செய்வாரோ அதற்குச் செல்லும் வழியில்தான் இந்த இரு ஸஹோதரர்களும் தங்களது கூடாரத்தை அமைத்துக்கொண்டனர். இருவருக்கும் பயந்துகொண்டு கங்கா ஸ்னானத்திற்கு யாரும் தனியாகச் செல்லாமல் பத்து பதினைந்து பேர்கள் சேர்ந்து சேர்ந்து செல்வார்கள். இரவில் யாரும் வீட்டை விட்டு வெளியே வரமாட்டார்கள்.

மாலையில் வழக்கம் போல் நாமஸங்கீர்த்தனம் நடைபெற்று வந்தது. எப்பொழுதும் போல ச்ருதி, ம்ருதங்கம், கரதாளம், கஞ்ஜீரா போன்ற வாத்யங்களும் பகவானின் ஸுமதுரமான நாம ஸங்கீர்த்தனமும் நடைபெற்றது. நன்றாகக் குடித்துவிட்டு வாயிலில் படுத்துக்கொண்டு இரு ஸஹோதரர்களும் நாம ஸங்கீர்த்தனத்தைக் கேட்கலுற்றனர். சில ஸமயம் தன்னை மறந்து ஹுங்காரம் செய்தனர். சில ஸமயம் ஆஹா! ஆஹா! என்றனர். சில ஸமயம் தாள லயத்துக்கு ஏற்ப நாட்டியம் ஆட ஆரம்பித்தனர். இப்படி நாம

ஸங்கீர்த்தனத்தின் மஹிமையைப் பற்றி தெரிந்துகொள்ளாமலே கேவலம் ச்ரவண மாத்திரத்தினாலேயே பித்துப்பிடித்தவர்கள் போல் ஆகிவிட்டனர். காதுகளின் வழியே உள்ளே புகுந்த பகவன் நாமத்தின் ப்ரபாவத்தால் இவர்களது க்ரூரம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. ஒரு நாள் அதிகாலையில் கண் விழித்த இருவரும் ப்ராத ஸ்னானத்திற்காக கங்கைக்கு தன் சிஷ்யர்களுடன் செல்லும் மஹாப்ரபுவைக் கண்டனர். நாமஸங்கீர்த்தனத்தின் ஜீவநாடியே அவர்தான் என்று அவர்களுக்குத் தெரியும். இருவரும் விறைப்பாக அவரிடம் சென்று ''நிமாயி பண்டிதரே! ராத்திரி மிகவும் இனிமையாகப் பாடினீர்களே! மங்களசண்டீ கீதமா அது? ஒருநாள் உங்கள் சிஷ்யர்களுடன் எங்கள் இருப்பிடத்திற்கு வந்து ஸங்கீர்த்தனம் செய்யுங்கள். என்னென்ன பொருள்கள் வேண்டும் என்று சொல்லுங்கள். எல்லா ஏற்பாடுகளும் செய்கிறோம்'' என்றனர்! நாமகீர்த்தனத்தின் ப்ரபாவத்தை என்னவென்று சொல்ல! இஷ்டமின்றி நாமகீர்த்தனத்தை கேட்டதுமே, ஒருவரிடமும் நேராகவும் பணிவாகவும் பேசத் தெரியாத முரட்டு ஸஹோதரர்களிடம் இப்படி மாற்றம் எற்பட்டதென்றால் மிகவும் அதிசயம்தான். ஆனால், ப்ரபுவோ ஒருபதிலும் கூறாமல் மௌனமாக முன்னே சென்றுவிட்டார்.

அன்று பகலில் பக்தர்கள் மஹாப்ரபுவிடம் வந்து, ''ப்ரபோ! இந்த இரு ஸஹோதரர்களை நீங்கள் நிச்சயம் உத்தாரணம் செய்ய வேண்டும். அதற்கு இதுதான் சரியான தருணம். அப்பொழுதுதான் உலகிற்கும் நாமஸங்கீர்த்தனத்தின் பெருமை பற்றி புரியும். பதிதர்களை பாவனமாக்கும் உங்கள் குணமும், தங்களது 'தீனபந்து' என்ற பெயருக்கும் அப்போதுதான் ஏற்றம் பெருகும்'' என்றனர்.

ப்ரபுவோ 'சிரித்துக்கொண்டே', ''பக்தர்களே! யாரை உத்தாரணம் செய்ய வேண்டும் என்று நீங்கள் இப்போது சிந்திக்கிறீர்களோ, அவர்களது மங்களத்திற்காக, ஏற்கனவே ஸ்ரீபாதர் கவலைப்பட்டு தனது தர்சனத்தையும் தந்தாகிவிட்டது. பிறகென்ன? அவரே அவர்களது மங்களத்தைப் பார்த்துக்கொள்வார்'' என்றார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ஸனாதனப்புதிர் - பகுதி - 18

தொகுப்பு : **''ஆத்ரேயன்'',** சென்னை.

1. ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் ஸாரதியின் பெயர் என்ன?
2. யதுவம்சத்தில் (யாதவர்களில்) சாபத்தில் இருந்து மிஞ்சியது யார்?
3. அநிருத்தனுடைய பிள்ளைக்கு (அநிருத்தனுக்கும் ருக்மியின் புத்திரனுடைய பெண் ரோசனைக்கும் பிறந்த பிள்ளைக்கு) யாரால் எங்கு பட்டாபிஷேகம் செய்யப்பட்டது?
4. ஸ்ரீ க்ருஷ்ணர் மீது, உலக்கையில் எஞ்சி நின்ற இரும்புத் துணுக்கைப் பொருத்தி அவரது பாதத்தில் பாணம் எய்த வேடன் பெயர் என்ன?
5. டில்லியில் இருந்து 100 மைல் உள்ள பானிப்பட்டில் இருந்து 5 - மைல் உள்ள புண்ய க்ஷேத்திரத்தின் பெயர் என்ன?
6. ஸரஸ்வதி நதி மேற்கு நோக்கிப் பாய்ந்து கடலில் கலக்கும் இடத்தில் உள்ள க்ஷேத்திரத்தின் பெயர் என்ன?
7. ஸ்ரீ க்ருஷ்ணரது பூலோக வாழ்க்கை 125 வருடம் என்று பாகவதம் கூறுகிறது. (11-ஸ்கந்தம் - 6-வது அத்தியாயம் 24-வது ஸ்லோகம்)

   மஹாபாரதம் ஆதிபர்வம் 115-வது அத்தியாயத்தில் தரப்பட்டுள்ள அட்டவணைப்படி எத்தனை வருடம்? அந்த அட்டவணையைத் தயாரிக்கவும்.
8. கௌதமர் சாபத்தால் இரண்டு வ்ருஷணங்களை இழந்த இந்திரனுக்கு அக்னியின் வார்த்தைப்படி பித்ருதேவதைகள் என்ன செய்தார்கள்?
9. ராமன், லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் இவர்களின் பத்னிகள் யார்?
10. ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்னன் இவர்களின் குழந்தைகளின் பெயர் என்ன?
11. இக்ஷ்வாஹு வம்சத்தில் தசரத மன்னனின் பேரன் குசன் - இவர்களது 30-வது தலைமுறையில் வந்த மன்னன் அபிமன்யுவால் மஹாபாரதப் போரில் கொல்லப்பட்டார். இவர் தசரதரில் இருந்து கணக்கிடப்படும்பொழுது எத்தனையாவது தலைமுறை?

ஸனாதனப்புதிர் பகுதி 18-க்கான பதில்களை
அக்டோபர் 25க்குள் அனுப்ப வேண்டும்.

## ஸனாதனப்புதிர் - பகுதி 17க்கான பதில்கள்

1. பூமிதேவி, விஷ்ணு-வராஹ அவதாரத்தின்பொழுது, பௌமாசுரன் என்ற நரகாசுரன்
2. ப்ராக்ஜ்யோதிஷபுரம் - அஸ்ஸாம்
3. சுதர்ஸன சக்ரத்தை
4. பகதத்தன்
5. 16000 - பாகவதம் 9-59-33, 16100 - விஷ்ணுபுராணம் - V, XXIX, 31
6. இந்த விஷயங்கள் பாகவத மஹாபுராணத்தில் இல்லை.
7. மரீசி, உர்ணா இவர்களது குழந்தைகள் - ஸ்மரன், உத்கீதன், பரிஷ்வாங்கன், பதங்கன், க்ஷுத்ரப்ரது, க்ருணி, கீர்த்திமந்தன், சுஷேணன், பத்ரசேனன், ருஜு சம்மர்தனன், பத்ரன் (வஸுதேவர் வைத்த பெயர்கள்)
8. ஸ்ரீ க்ருஷ்ணன், பலராமன் சுதலம் சென்று மஹாபலியின் அனுமதியோடு கம்ஸனால் சொல்லப்பட்ட ஆறு குழந்தைகளைக்கொண்டு வந்து, தேவகி-வஸுதேவர் இவர்களை ஆறு குழந்தையோடு சந்திக்க வைப்பது தசம ஸ்கந்தம் 85 அத்தியாயத்தில் கூறப்பட்டு இருக்கிறது.
9. அணிமா, மஹிமா, லகிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஈசிதா,வசிதா, காமவசாயிதா.
10. ஸ்கந்தம்-12- அத்தியாயம் 12
11. நாம ஸங்கீர்த்தனம் யஸ்ய ஸர்வபாபப்ரணாஶனம் ।
    ப்ரணாமோ துக்க ஶமன: தம் நமாமி ஹரிம்பரம் ॥

## ஸனாதனப் புதிர் - பகுதி - 17க்கான சரியான பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்

**முதல் பரிசு ரூ. 250/- (தலா ரூ. 125/-)**

1. G. Vidhyaranyan, C/o. D. Mallikarjunasomayaji, Plot No. 205, Ashta Lakshmi Nagar, 7th Cross, Alappakkam, Chennai - 600 116.
2. S. Saranathan, 10/21, Ranganathan Street, Nehru Nagar, Chrompet, Chennai - 600 044.

**இரண்டாம் பரிசு ரூ. 150/- (தலா ரூ. 75/-)**

1. K.S. Subramanyan, 16/4, Dr. Ranga Road, Mylapore, Chennai - 600 004.
1. K.L. Veeraraghavan, Plot No. 29, Door No.3, Majestic Colony, Valasaravakkam, Chennai - 600 087.

**மூன்றாம் பரிசு ரூ. 100/- (தலா ரூ. 35/-)**

1. C. Hari, C/o. Madhuramurali Bhavan, Plot No. 590, II Main Road, Ashtalakshmi Nagar, Alappakkam, Chennai - 176.
2. T.R. Balasubramanian, 175/3, Chithirai Street, Chinmaya Nagar, Stage II, Virugambakkam, Chennai - 912.
3. C. Krishnaswami, 23 (32), Jambulinga Naicka Street, Chennai - 34.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 58

ப்ரபலமாக இருக்கக்கூடிய மூன்றுவிதமான ஸித்தாந்தங்களில் 'ஜீவனும், பரமாத்மாவும் வேறு' (ஒன்றல்ல இரண்டு) என்று கூறும் த்வைதமத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்த மத்வாச்சாரியார் உடுப்பி க்ஷேத்திரத்திற்கு ஸமீபத்தில் உள்ள கடற்கரையில் தியானத்தில் ஆழ்ந்து அமர்ந்திருந்தார். அப்பொழுது, வெளிநாட்டு வியாபாரிகளின் ஒரு கப்பல், பல விலையுயர்ந்த ரத்தினங்களை ஏற்றிக்கொண்டு அந்த கடற்கரை வழியாகச் சென்றுகொண்டிருந்தது.

அந்த ஸமயத்தில், திடீரென சுழற்காற்றுடன் கூடிய புயல்வீச ஆரம்பித்தது. அந்த சுழல்காற்றிலே கப்பல் தள்ளாட ஆரம்பித்தது. அந்தக் கப்பலிலே பயணம் செய்த வெளிநாட்டு வியாபாரிகள் அந்த சுழல்காற்றிலும் அசையாமல் கரையில் அமர்ந்திருந்த இந்தத் துறவியைக் கண்டனர். தங்களைக் காக்க வேண்டி கப்பலில் இருந்தபடியே அபயக் குரல் எழுப்பினர். ஸ்ரீமத்வாச்சாரியரும் அவர்கள்மீது கருணைகொண்டு அந்த க்ஷணமே வாயு ஸ்தம்பனம் செய்து (வாயுவை அடக்கி) சுழல்காற்றை நிறுத்திவிட்டார்.

வெளிநாட்டு வியாபாரிகள் அதிசயித்தனர். ஸ்வாமிகளுடைய கருணையை எண்ணி உருகினர். கரையிலே இறங்கி அவரை வணங்கி தங்களுடைய கப்பலிலே இருந்த ரத்தினங்களை எல்லாம் அவருடைய பாதத்திலே காணிக்கையாக ஸமர்ப்பித்தனர். அவற்றையெல்லாம் ஸ்வாமிகள் நிராகரித்துவிட்டார். இவ்வளவு விலையுயர்ந்த ரத்தினங்களை அவர் நிராகரித்ததைக் கண்டு அவர்களுக்கு மேலும் ஆச்சரியம் தாங்கவில்லை.

அவர்கள் மத்வாசார்யரைப் பார்த்து, ''எங்களுடைய நன்றியை தெரிவிக்க உங்களுக்கு ஏதாவது காணிக்கை ஸமர்ப்பிக்க விரும்புகிறோம். ஆனால், நீங்களோ இந்த விலையுயர்ந்த ரத்தினங்களை ஏற்க மறுத்துவிட்டீர்கள். உங்களுக்கு என்ன ஸமர்ப்பிப்பது என்று தெரியவில்லை'' என்று தழுதழுத்த குரலில் தயங்கித் தயங்கி கேட்டனர். அதற்கு அவர், ''எனக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமென்று விரும்பினால் உங்கள் கப்பலில் பாரத்தை ஸமம் செய்வதற்காக (Balance செய்வதற்காக) வைத்திருக்கும் மண்

மூட்டையைக் கொடுங்கள். அதையே நான் விரும்புகிறேன்'' என்று கூறினார். இதைக் கேட்ட அந்த வியாபாரிகள் மேலும் அதிசயித்தனர். ''தாங்கள் உயர்ந்த ரத்தினங்களையெல்லாம் விரும்பாமல் இந்த மண் மூட்டையை விரும்பும் காரணத்தை நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?'' என்று தயங்கித் தயங்கி கேட்டனர்.

அதற்கு ஸ்வாமிகள், ''இது ஸாதாரண மணல் மூட்டையல்ல. இது கோபி சந்தனம். இந்த கோபி சந்தனத்தை நெற்றியில் இட்டுக் கொள்வதால் ஹரிபக்தி வளர்கிறது. தலையெழுத்து நமக்கு அனுகூலமாக மாறுகிறது. கோபி சந்தனம் இட்டுக்கொண்டு பித்ரு கார்யங்கள் செய்வதால் பித்ருக்கள் ஸந்தோஷம் அடைகின்றனர். கோபி சந்தனம் இட்டுக்கொண்டு நாம் செய்யும் கர்மாக்கள் நிறை வேறுகின்றன. நாம் வீதியில் செல்லும்பொழுது, கோபிசந்தனம் இட்டுக்கொண்டு ஒருவர் எதிரில் வந்தால், அவரை வெட்கத்தைவிட்டு விழுந்து நமஸ்காரம் செய்ய வேண்டும். கோபி சந்தனம் இட்டுக் கொள்பவனுக்கு கனவில் கூட நரகவாசம் கிடையாது'' என்று கோபிசந்தனத்தின் ப்ரபாவங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்.

அதோடு மட்டுமல்லாமல், ''இந்த கோபிசந்தனத்தின் நடுவில் என்னுடைய ப்ராணநாதனாகிய பாலகோபாலன் இருக்கின்றான்'' என்று சொல்லியவாறே கோபாலன்மீது அழகான ஒரு ஸ்துதி செய்ய ஆரம்பித்தார். கால்களில் சலங்கை கொஞ்ச, இடுப்பினில் கிண்கிணி அசைய, கையிலே மத்துடனும் மழலை மாறாத முகத்துடனும் பாலகோபாலன் அந்த கோபிசந்தனத்தின் நடுவிலிருந்து அர்ச்சாவதார ரூபத்திலே ஆவிர்பவித்தான். அந்த மூர்த்தியைத்தான் உடுப்பியில் மத்வாச்சாரியார் ப்ரதிஷ்டை செய்தார். அந்த மூர்த்தியையே உடுப்பியில் இன்றும் நாம் தரிசனம் செய்கின்றோம்.

ஒரு ஸமயம், துவாரகையில் ருக்மிணி பிராட்டி பகவானிடம் அவரது பாலரூபத்தை பார்க்க வேண்டுமென்று ஆசையாக உள்ளது என்று கூற, பகவான், கையில் மத்துடன் கூடிய தனது சிறிய அர்ச்சாவதாரத்தை ருக்மிணி பிராட்டியிடம் கொடுத்தார். அந்த க்ருஷ்ணனை ருக்மிணி பிராட்டி வெகுகாலம் ஆராதித்தார். அந்த க்ருஷ்ணன்தான் இன்றும் உடுப்பியில் நாம் காணும் பாலகோபாலன். மத்வாச்சாரியர் ஸ்தாபித்த எட்டு மடங்களைச் சேர்ந்த அவரது சீடர்கள் இன்றும் அந்த க்ருஷ்ணரை ஆராதித்து வருகின்றனர்.

# மாலே மணிவண்ணா - 1

**- தமிழ் வித்வான்திரு. வே. சிவசுப்பிரமணியன்**

தமிழ் மொழியின் தொன்மையை இன்றும் விளக்கி நிற்கும் இலக்கண நூல் தொல்காப்பியம். கி.மு. பத்தாம் நூற்றாண்டு என்று அதன் காலத்தை ஆராய்ச்சியாளர் சொல்வர். பற்பல இலக்கியங்கள் தோன்றிய பின்னரே ஓர் இலக்கண நூல் மொழியில் தோன்றும் என்பது மொழி வரலாறு கூறும் உண்மை. அப்படியானால் தொல்காப்பியத்துக்கு முன்னரே பல இலக்கியங்கள் தமிழில் இருந்திருக்கின்றன என்பது தெளிவாகின்றது.

தொல்காப்பியப் பாயிரம் தமிழ் நாட்டு எல்லையை ''வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்'' என்று கூறுகிறது. தமிழகத்தின் வட எல்லைக்குத் தொல்காப்பியம் காட்டும் அடையாளம் 'வேங்கடமலை' ஆகும்.

இப்பாயிரப் பகுதிக்கு உரை எழுதிய பாரத்துவாச கோத்திரத்தினராய நச்சினார்க்கினியர், ''நிலங்கடந்த நெடுமுடி அண்ணலை நோக்கி, உலகம் தவம் செய்து வீடு பெற்ற மலை ஆதலானும் எல்லாராலும் அறியப்படுதலானும் வேங்கடத்தை முற்கூறினார்'' என்று உரை எழுதினார்.

திருவேங்கடமலை திருமால் வீற்றிருந்தருளும் மலை என்பதும், உலகத்தில் உள்ளவர் அனைவரும் அப்பெருமானை நினைத்துத் தவம் செய்து வீடுபேறு அடைந்து வருகின்றனர் என்பதும், எல்லோராலும் அறியப்பட்ட வழிபாட்டுத் தலம் என்பதும் இன்றைக்கு இருப்பது போலவே தொல்காப்பியர் காலத்தும் இருந்து உள்ளமையை அறிகின்றபொழுது திருமால் வழிபாடு தமிழகத்தின் காலங்கடந்த தொன்மையான வழிபாடு என்பது நன்கு விளங்கும். தொல்காப்பியத்தை இலக்கணமாகக்கொண்டு தோன்றிய சங்க இலக்கியங்கள் கி.பி. முதல் நூற்றாண்டுக்குச் சற்று முன்பின்னாக அமையும் காலத்தே தோன்றியவை. சங்க இலக்கியங்களைக் கூறும் பொழுது, ''பாட்டினும் தொகையினும் கீழ்க்கணக்குகளினும்'' என்று

உரையாசிரியர்கள் எழுதுவார்கள். அவை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினென்கீழ்க்கணக்கு என்பவை. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை இரண்டையும் சேர்க்க பதினெட்டு நூல்கள் ஆகும். இவற்றை மேற்கணக்கு என்றும் சொல்வர்.

எட்டுத்தொகை நூல்கள் தொகை நூல்கள். பலர் பாடிய பாடல்களைப் பொருள்நோக்கியும் செய்யுள் நோக்கியும் அடிவரையறை நோக்கியும் தொகுத்துச் சேர்த்த நூல்கள் இந்த எட்டும் ஆகும். இவற்றை, ஒரு பழம்பாடல்,

> ''நற்றினை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
> ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் ஏத்தும் கலியே அகம் புறம் என்று
> இத்திறத்த எட்டுத்தொகை''

என்று பெயர் சொல்லி விளக்குகிறது.

இந்த எட்டுத் தொகை நூல்களும் தொடங்குங்கால் ஒரு தெய்வத்திற்கு வாழ்த்தோ வணக்கமோ கூறித் தொடங்குகின்றன. முதற்கண் தெய்வ வணக்கம் இல்லாத தொகை நூல் எதுவும் பழந்தமிழில் இல்லை. பத்துப்பாட்டிற்கு முதலில் அமைந்த 'திருமுருகாற்றுப்படை' என்னும் முருகப் பெருமானைப் பற்றிய நூலே தெய்வ வணக்கமாக அமைந்தது.

இறைவழிபாடு என்பது பழந்தமிழர் வாழ்வியல் நாகரிகத்தில் தலைசிறந்த ஒன்றாகும். தெய்வ வழிபாடற்றவர் தமிழராகார் என்கிற அளவுக்குத் தமிழ் இலக்கியங்கள் இவ்வழிபாட்டுக் கொள்கைக்கு முதல் இடம் கொடுத்திருக்கின்றன.

எட்டுத்தொகை நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடலைக் காண்போம். நற்றிணையில் திருமாலும், குறுந்தொகையில் முருகனும், அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, ஆகிய நூல்களில் சிவபெருமானும் என வழிபாட்டுப் பாடல்கள் அமைந்துள்ளன. இப்பாடல்கள் அனைத்தையும் பாடியவர் ''பாரதம் பாடிய பேருந்தேவனார்'' என்னும் பெரும்புலவரே. பதிற்றுப்பத்து நூலின் முதற்பகுதி கிடைக்கப்பெறவில்லை; ஆயினும், கிடைத்துள்ள

இரண்டாம்பத்தின் முதற்பாடல் முருகனை உவமையாகச் சொல்லுகிறபடியால், அதுவும் தெய்வ வழிபாட்டுடன் தொடங்குவதாகவே ஆயிற்று. மற்றொன்று பரிபாடல், பரிபாடல் 70 பாடல்களை உடையதாயினும் இன்று கிடைப்பன 22 பாடல்களே. நூல் முழுமையாகக் கிடைக்கப் பெறாவிடினும் கிடைத்துள்ள வரிசைப்படி முதற்பாடல் திருமாலைப் பரவுவதாகவே அமைகிறது.

எனவே, தெய்வம் இல்லாத தமிழ் இல்லை என்பதும் தெய்வத்தை விட்டவர்கள் தமிழையும் விட்டவர்களே என்பதும் தமிழ் கூறும் உண்மையாகும்.

தொன்றுதொட்டு வந்த இத்தெய்வ நெறியினும் திருமால் நெறிக்குத் தனிச் சிறப்புண்டு. தொல்காப்பியர் நிலத்தொடு தெய்வத்தைச் சேர்த்துக் கூறும்போது, திருமாலுக்குரிய முல்லை நிலத்தை முதற்கண் வைத்து

''மாயோன் மேய காடுறை உலகமும்'' என்று தொடங்கித் திருமாலை முதற்கண் காட்டி முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று வரிசைப்படுத்தி அமைத்தார். கீழிருந்த நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி என்றாவது, தோற்ற முறை பற்றி குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்றாவது கூறாமல் மாறாக முல்லையை முதற்கண் வைத்தது மாயோனாகிய திருமாலை முதற்கண் வைக்க வேண்டும் என்று அவர் எண்ணியதனாலேயே அன்றோ!

இம்முறை எட்டுத்தொகை வரிசையிலும் பின்பற்றப்பட்டு இருக்கிறது. பொருள்பற்றி இவற்றை வரிசைப்படுத்தினால் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்னும் வரிசை வரும். இதற்கு மாறாக நற்றிணையை முதற்கண் வைத்தது கூட அதன் முதற்கண் அமைந்திருக்கின்ற திருமால் வணக்கத்தை நினைத்தோ என்று கருத வேண்டியுள்ளது. அந்தச் செய்யுள் திருமாலின் பரம்பொருள் தன்மையை நன்கு விளக்கிச் செல்கிறது - உலகமே உருவமானவன் திருமால் - உலகத்தின் உள்ளே நிறைந்திருக்கின்றான். உலகம் அவனுக்குள்ளே நிறைந்திருக்கின்றது. உலகத்தைக் கடந்தும், உலகத்துள் நிறைந்தும் இருக்கின்றபடியால் 'கடவுள்' என்னும் பெயர்க்குப் பொருளால் சிறந்து விளங்குகின்றான் அவன்.

இந்த நிலமே அவன் திருவடி; சங்குகள் ஒலிக்கின்ற கடலே அப்பெருமானது உடை, ஆகாயமே, அவனது திருமேனி, எட்டுத் திசைகளும் அத்திருமாலின் கைகள், சந்திரனும், சூரியனும் அப்பரந்தாமனின் இரு கண்கள், தன்னால் படைக்கப்பட்ட எல்லாப் பொருள்களிலும் தான் உடனுறைகின்றான். அப்பொருள்கள் எல்லாவற்றையும் தன்னகத்தே அடக்கியும் விடுகிறான். ஒருவரால் சொல்லப்படாதது என்று எல்லோராலும் புகழப்படும் வேதத்தால் சொல்லப்படும் முதற்பொருள் அவனே; வேதத்தைச் சொல்லிய முதல்வனும் அவனே. இவ்வுலகத்தவர் துன்பங்களிலிருந்து நீங்குவதற்காக எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கிற சக்கரப் படையை உடைய திருமால் என்று அவனை வாழ்த்துவர் என்று நற்றிணையில் கடவுள் வாழ்த்து திருமாலைச் சொல்கிறது.

உலகமே வடிவாக, உலகங்கடந்த பொருளாக, உலகை உள்ளடக்கியவனாக, வேதமுதல்வனாக, சுடராழி ஏந்திய செல்வனாகத் திருமாலைக் காண்கிறது நற்றிணை. அப்பாடல்,

''மாநிலம் சேவடி ஆக, தூ நீர்
வளைகரல் பௌவம் உடுக்கை ஆக,
விசும்பு மெய் ஆக, திசை கை ஆக,
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ஆக
இயன்ற எல்லாம் பயின்ற அகத்து அடக்கிய
வேத முதல்வன்'' - என்ப
'தீது அற விளங்கிய திகிரியோனே.'

(வளை - சங்கு, பௌவம் - கடல், உடுக்கை - உடை, விசும்பு - ஆகாயம், மதியம் - சந்திரன், சுடர் - சூரியன், இயன்ற - தன்னால் உண்டாக்கப்பெற்ற, எல்லாம் - எல்லாப் பொருளிலும், பயின்று - தான் உடன்தங்கியிருந்து, அகத்து - தன்னுள்ளே, அடக்கிய - அவற்றை மறைத்துக்கொண்ட, திகிரியோன் - சக்கரம் ஏந்திய திருமால்)

அற்புதமான இந்தத் திருமால் வணக்கம் பற்றித்தான் நற்றிணையை அந்தப் பழம்பாடல் முதலில் வைத்து வரிசைப் படுத்தியதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

எட்டுத்தொகையில் நடுவணதாகிய ஐந்தாவது நூலாகக் குறிப்பிடப்படுவது 'பரிபாடல்' ஆகும். இந்தப் பரிபாடல் 'ஓங்கு பரிபாடல்' என்று எல்லா நூல்களனும் சிறந்த பரிபாடல் என அடைமொழி கொடுத்துச் சிறப்பிக்கப் பெற்றுள்ளது.

'பரிபாடல்' என்பது ஒரு செய்யுள்வகை. அவ்வகைச் செய்யுளால் செய்யப் பெற்றதால் 'பரிபாடல்' என்று பெயர் பெற்றது. பரிந்து பரிந்து பேசுகிறான் என்று உலகவழக்கில் சொல்வர். அதுபோல ஒரு பொருளைப் பற்றி விரும்பி பரிந்து பரிந்து கூறுவது பரிபாடல் என்றும் கூறலாம். இது ஒரு இசைப்பாடல் வகை.

எழுபது பாடல்களை உடைய பரிபாடலில் இன்று முழுமையாகக் கிடைக்கப் பெற்றது இருபத்திரண்டு பாடல்களே. இப்பாடல்தொகை - திருமாலுக்கு எட்டு, முருகனுக்கு 31, துர்க்கைக்கு ஒன்று, வையைக்கு 26, என்ற பாடலுள் திருமாலுக்கு ஆறு, முருகனுக்கு எட்டு, வையைக்கு எட்டு ஆக 22 பாடல்களே கிடைத்துள்ளன.

எழுபது பாடலில் முதற்பாடலே திருமாலைப் பற்றிய பாடலாகும். இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்தாகவும் அமைந்து நலம் செய்கிறது. இதன் தனிச்சிறப்பு - இந்நூலைத் தேடிச் செப்பனிட்டு நமக்களித்த தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்களுக்குத் தமிழுலகம் செய்யக்கடவ கைமாறென்னே!

திருமாலைத் தமிழ்நூல்கள் பலதேவனாகவும், கண்ணனாகவும் கண்டு வழிபடும். வலியாற் சிறந்தவன் பலதேவன் என்றும், புகழால் சிறந்தவன் கண்ணன் என்றும் சங்கப் பாடல்கள் புகழ்ந்து கூறும்.

காலைக்கதிரவன் பொன்னொளியில் வெள்ளிமலை பொன் மலை போல மின்னுகிறது. ஒரு நீல மலை அப்பொன்மலை மேல் வீற்றிருந்தது போல எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் பெரிய திருவடியாகிய கருடாழ்வார் மேல் ஆரோகணித்து வருகின்றான். துளபமாலை அணிந்த அத்திருமாலே பரிபாடலின் பயன் என்று இந்நூலுக்கு உரை எழுதியவரும், காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயில் அர்ச்சகரும், பரமவைணவரும் ஆகிய

''நீள்நிலங்கடந்தோன் தாள் தொழும்மரபின்''

பரிமேலழகியார் ஒரு உரைப்பாடல் மூலம் நமக்கு விளக்கினார்.

"விரும்பி அருள் நீல வெற்பு இமயக் குன்றின்
வரும் பரிசு புள்ளூரும் மாலே - சுரும்பு
வரி பாடல் இன்சீர் வரை துளவத் தோளாய்
பரிபாடலின் சீர்ப் பயன்."

என்னும் உரைப்பாடலால் பரிபாடலின் பயனே திருமால் என்று உணரலாம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுந்த பரிபாடல் திருமாலின் அருளும், அழகும், பெருமையும், கூறிப்பரவும் வகையையும், அப்பெருமானிடத்திலே வேண்டும் வகையையும் நமக்குக் கற்றுத்தருகிறது. கற்று வழிபடுவோம்.

(தொடரும்)

---

ஒரு குருவானவர் முதலில் ஒருவனுக்கு வித்யையை சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்கும்பொழுது, "நீ நன்றாகப் படித்து இந்த கலையில் பெரியவனாக வரவேண்டும்" என்றெல்லாம் உபதேசம் செய்து ஆரம்பிப்பார். நாளடைவில் அவன் அந்த கலையை நன்றாக கற்கும்பொழுது இவன் தனக்கு ஸமமாகவோ அல்லது தன்னைவிடப் பெரிய கலைஞனாகவோ வந்துவிடுவான் என்று அவர் கருதுவார். அதனால், அதை அவரால் தாங்க முடியாது. எப்படியாவது அவன் தன்னை மிஞ்சிவிடாதபடி பார்த்துக்கொள்வார். வாழ்க்கையில் கடினமாக உழைத்து பொருள் ஈட்டிய ஒருவன், "செல்வம் ஈட்டுவது எப்படி?" என்று எல்லோருக்கும் வகுப்பு எடுக்கவும், கட்டுரை எழுதவும் ஆசைப்படுவான். ஆனால், உண்மையில் தன்னை மிஞ்சி ஒருவன் செல்வந்தனாவதை எவனும் விரும்பமாட்டான். அதுபோல், மந்திரஸித்தி பண்ணிக்கொண்டிருப்பவர்கள், பலருக்கு மந்திர உபதேசம் செய்வதற்கு முன் வரலாம். ஆனால், அதை விடாமல் ஜபம் செய்து தன்னைப் போல் அந்த மந்திரத்தில் மற்றொருவர் ஸித்தி அடைவதையோ அல்லது தன்னைவிட உயர்ந்த நிலையை அடைவதையோ அவர்கள் விரும்பமாட்டார்கள். ஆனால், உண்மையான ஜீவன் முக்தர்களான மஹான்கள்தான், அனைவரும் தன்னைப் போலவே அத்தகைய உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்று உண்மையில் நினைப்பார்கள். அந்த நிலையில் நம்மை சேர்த்தும் விடுவார்கள்.

- ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 10

வங்க தேசத்திலுள்ள பாங்குடா ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீ ரசிகானந்த ப்ரபுவின் கடைசி புத்திரன் ஸ்ரீ நந்தகிசோர்கோஸ்வாமி. இவர் ஸ்ரீ ஸ்ரீ நித்யாநந்த ப்ரபுவின் ஏழாவது பரம்பரையைச் சேர்ந்தவர். குழந்தைப் பருவத்திலிருந்தே விரக்தராகவும் சிஷ்டாசாரத்துடனும் திகழ்ந்தார். ஸ்ரீ நித்யானந்தரின் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதாலேயே வைஷ்ணவர்களுக்கு பூஜ்யராகத் திகழ்ந்தார். சிறியவர், பெரியவர், க்ரஹஸ்தர்கள், த்யாகிகள் எல்லோரும் இவரை மதிப்புடனும், மரியாதையுடனும் நடத்தலானார்கள். இதனால், இவருக்கு வருத்தமேற்பட்டது. மஹாப்ரபுவின், ''த்ருணாதபி ஸுனீசேன...'' (புல்லைவிட தாழ்மையான) என்ற **பா**வத்திற்கு இந்த மரியாதைகள் ப்ரதிகூலமாக இருந்தது. நந்தகிசோர்கோஸ்வாமிக்கு உயர்ந்த வைஷ்ணவ குருவிடமிருந்து பஜனை சிக்ஷை பண்ணிக்கொண்டு வாழ மிகவும் ஆசையாக இருந்தும், அவர் நித்யானந்தரின் பரம்பரையைச் சேர்ந்தவர் என்ற காரணத்தாலேயே அது முடியாமல் போயிற்று.

இதனால், அவர் ஒருநாள் வீட்டை விட்டு மௌனமாக ப்ருந்தாவனம் சென்றுவிட்டார். அப்பொழுது கௌடீய வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் ஶிரோன்மணியாகத் திகழ்ந்த ஸ்ரீ விஶ்வநாத் சக்ரவர்த்திபாத் ப்ருந்தாவனத்தில் இருந்தார். தன்னைப் பற்றி ஏதும் கூறிக் கொள்ளாமல் அவரிடம் சென்று நந்தகிசோர்கோஸ்வாமி பஜனை சிக்ஷையும் ஶாஸ்த்ர அத்யயனமும் வேண்டி ப்ரார்த்தனை செய்துகொண்டார். விச்வநாத் சக்ரவர்த்திபாதரும் அதை ஏற்று அவரை சிஷ்யராக ஸ்வீகரித்துக்கொண்டார். யாருக்கும் நந்தகிசோர், நித்யானந்தரின் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பது தெரியாமலே இருந்தது.

நந்தகிசோரின் அன்னைக்கு அவர் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டுச் சென்றது மிகவும் வருத்தத்தை ஏற்படுத்தியது. அவரைத் தேடிக் கண்டுபிடிக்க வைஷ்ணவர்களை இங்கும் அங்கும் அனுப்பி வைத்தாள். ஸ்ரீ வைஷ்ணவர்கள் அங்ஙனம் தேடுகையில்,

ப்ருந்தாவனத்தில் சக்ரவர்த்தி பாதரிடம் அவர் இருப்பது தெரிந்து அவரிடம், சென்று அன்னையின் வருத்தத்தை தெரிவித்து நந்தகிசோரை திருப்பி வீட்டுக்கு அனுப்பிவைத்து இல்லற வாழ்க்கையை மேற்கொள்ளத் தூண்டுமாறு ப்ரார்த்தித்தனர்.

சக்ரவர்த்திபாதருக்கும் வணக்கத்துக்குரிய கோஸ்வாமியான அன்னையின் வேண்டுகோளை தட்டமுடியவில்லை. அவர் நந்தகிசோரிடம், ''நீ என்னை சிக்ஷாகுருவாக ஏற்றுக்கொண்டாய் அல்லவா? நான் கேட்கும் குருதட்க்ஷிணையை எனக்குத் தருவாயா?'' என்று கேட்டார். நந்தகிசோர், ''ஆணையிடுங்கள்! கட்டுப்படுவேன்'' என்றார். ''குரு தக்ஷிணையாக நீ உன் அன்னையின் ஆணையை மேற்கொண்டு வீடு திரும்பி விவாஹம் செய்துகொள்'' என்றார் சக்ரவர்த்திபாதர்.

நந்தகிசோர்ஜியும் அந்த கோரிக்கையை சிரமேற்கொண்டு வீடு திரும்பி கல்யாணம் செய்துகொண்டார். ஒரு புத்திரனும் பிறந்தான். பிறகு மறுபடி வீட்டைத் துறந்து ப்ருந்தாவனம் வந்தடைந்தார். தன்னுடன், ஸம்வத் 1815-ஆம் ஆண்டின் பாதுஷாவின் ஸன்னதுடன் கூடிய ஸ்ரீ நிதாயி, ஸ்ரீ கௌராங்கர் விக்ரஹங்களையும் எடுத்துச் சென்றார். ஶ்ருங்காரவடத்தில் தங்கினார். இன்றும் கூட இங்கு இந்த விக்ரஹங்களுக்கு விதிமுறை வழுவாமல் ஸேவை, பூஜை நடைபெற்று வருகிறது. இந்த விக்ரஹங்களின் அலௌகிகமான ப்ரபாவத்தைக் கண்டு அப்போதைய ஜோத்பூர் ராஜா நந்தகிசோருக்கு ஏகப்பட்ட பூமிதானம் செய்தார். அதன் மூலம் வரும் செல்வத்தால் இன்றுவரை அவரது பரம்பரையினர் நிதாயி கௌராங்கருக்கு ஸேவை செய்து வருகிறார்கள்.

ஸ்ரீபாத் நந்தகிசோரிடம், போந்து என்ற வ்ரஜவாஸி பையன் அவரது மாடுகளை மேய்ப்பதற்காக இருந்து வந்தான். அவன் கள்ளம் கபடம் இல்லாதவன். ஸாமர்த்தியம் என்பது சிறிதளவும் கிடையாது. யாராவது அவனிடம் பொய்யாக ஏதாவது கூறினாலும் அதை அப்படியே ஸந்தேகப்படாமல் ஏற்றுக்கொள்வான். இப்படி கபடமில்லாமல் இருப்பதாலேயே அவனை எல்லோரும், ''போந்து'' என்று அழைத்தனர். காலையில் கோவிலில் பாலபோக் ப்ரஸாதத்தை வாங்கிக்கொண்டு மாடுகளை அழைத்துக்கொண்டு பாண்டீரவனம்

சென்றுவிடுவான். அவனிடம் யாரோ பாண்டீரவனத்தில் நந்தலாலா இடைச்சிறுவர்களுடன் மாடு மேய்க்க வருவான் என்று கூறியிருந்தார்கள். அவனுக்கும் நப்பாசை, எப்படியாவது பாண்டீர வனத்துக்கு நந்தலாலா வந்தால் அவனுடன் ஸ்நேஹம் பிடித்துக் கொண்டு ஓடிக்குதித்து விளையாடலாமே! என்று.

கள்ளம் கபடமில்லாத போந்துவின் ஹ்ருதய **பா**வ அலை பொங்கிப் பொங்கி பக்தவத்ஸலனான பகவானின் ஹ்ருதயத்தைச் சென்று தொட்டது. அவனுக்கும், 'போந்து'வுடன் தோழமை கொண்டு துள்ளிக் குதித்து விளையாட ஆசை உண்டாகிவிட்டது! பிறகென்ன?

ஒருநாள், பகவான் பாண்டீரவனத்திற்கு தன் தோழர்களுடன் சென்று போந்துவுக்கு தரிசனம் தந்தான். தரிசனம் தோழமையில் முடிந்தது. போந்து, தினமும் உண்பதற்கும், குடிப்பதற்கும் ஏதாவது எடுத்து வருவான். அதைப் பிடுங்கி தோழமையுடனும், அன்புடனும் நந்தலாலா உண்டு, அருந்தி மகிழ்வான். தன் தோழர்களுக்கும் அளிப்பான். அனைவரும் குதித்து ஓடி மகிழ்வார்கள். ஸ்ரீபாத் நந்திகிசோர் தினமும் போந்து தலையில் நிறைய சுமை ஏற்றுக்கொண்டு செல்வதைக் கண்டு, ''அடே! போந்து, என்ன தலையில் ஏற்றிக்கொண்டு செல்கிறாய்?'' என்று வினவினார்,

''ஸ்ரீபாத்! அன்னமும் பருப்பும் எடுத்துச் செல்கிறேன்'' என்றான் போந்து. ''யாருக்காக?'' என்றார் ப்ரபு. ''நந்தலாலாவும் அவன் தோழர்களும் தினமும் வருவார்கள், அவர்களுக்குத்தான்'' என்றான் போந்து. ''நந்தலாலாவா? எந்த நந்தலால்?'' என்றார் ஸ்ரீபாதர் ''அதுதான் அந்த பன்ஸீவாலா நந்தலால் ப்ரபு! பாண்டீரவனத்திற்கு தினமும் மாடு மேய்க்க தன் சகாக்களுடன் வருவான்! அவன்தான்'' என்றான் போந்து.

''பன்ஸீவாலாவா? தோழர்களுடன் மாடுமேய்க்க வருவானா? அடே! அவன் எப்படி இருப்பான்? அவனது முகாரவிந்தம் எப்படியடா இருக்கும்'' என்று ஸ்ரீபாத் கேட்டார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 85

தானே தானே தத்துவம் இதனைத்
தானே காட்டுவாய் அருணாசலா -

"தானே தானே தத்துவம் இதனை" - இங்கு அத்வைதானுபூதியை அருணாசலேஸ்வரனிடம் ப்ரார்த்திக்கிறார் ரமண பகவான். உலகில் பிறந்த ஜீவர்கள் அனைவரும் இந்த அத்வைதானுபவத்தை உணராத வரையில் திரும்பி திரும்பி ஜன்மங்கள் எடுத்து துக்கப்பட வேண்டி வரும்.

ஜீவன், "ப்ரஹ்மம் இங்கிருக்கிறது, அங்கிருக்கிறது" என்று பலவிதமாய் கல்பித்துக்கொள்கிறது. ஜீவன் தனக்கு அன்னியமாய் ப்ரஹ்மத்தை நினைப்பதால், மனப்ராந்தியால் ஏற்படும் பல்வேறு துக்கங்களை அனுபவிக்கிறது. எப்பொழுது ஜீவன் தானே ப்ரஹ்மம் என்று அனுபவத்தில் உணர்கிறதோ, அப்பொழுதுதான் பூரணசாந்தி ஒரு ஜீவனுக்குக் கிடைக்கிறது.

ஸமாதி அனுபவத்தில், பலதரப்பட்ட மனப்ரமைகள் அடிபட்டு, தானே அந்த தெய்வம் என்பதை ஸாதகன் உணர்கிறான். அந்த ஸமாதி அனுபவத்தில் பார்க்கக்கூடிய பொருள் என்று ஒன்றும், பார்க்கிறவனும், பார்ப்பது எனும் செயலும் இல்லை. ஏனெனில், ஸமாதியில் மனது அழிந்து விடுகிறது என்பதால், அன்னியமாய் தெய்வம் என்று (எந்த ஒரு பொருளும்) ஒன்று ஸாதகனுக்கு இல்லாமல் போய், இவனே தெய்வமாகி விடுகிறான்.

ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் எல்லாம் எங்கு உள்ளது என்றால், நம் மனதில்தான் உள்ளது. இரவில் தூங்கும்பொழுது இந்த ப்ரபஞ்சமானது எங்கு போயிற்று? மறைந்து விடுகிறது. மறுபடியும் விழித்தெழுகையில் ப்ரபஞ்சம் தெரிகிறது. தூக்கத்தில் மனம் லயத்தை அடைகிறது. மனம் லயத்தை அடைந்தால் ப்ரபஞ்சம் தெரியவில்லை. தூக்கத்திலிருந்து எழுந்தவுடன் புத்தியும் எழுந்திருக்கிறது. புத்தியினால் ப்ரபஞ்சம் கண்ணுக்கு மீண்டும் தெரிகிறது.

இரவு தூங்கும்பொழுது இந்த சென்னை மாநகரம் மறைந்து போயிற்று. குடும்பத்தில் பந்துக்கள் பற்றி தூக்கத்தில் தெரியவில்லை. எங்கு படுத்துக் கொண்டிருக்கிறோம் என்று தூக்கத்தில் தெரிவதில்லை. சரீரம் தூக்கத்தில் எப்படி இருந்தது என்றும் தெரியவில்லை. காரணம், மனதானது அடங்கிப் போனதுதான். மேற்கண்ட விஷயங்கள் இருப்பதாகச் சொல்வதும் மனதுதான். ஆகையால்தான் மனது எழுந்தால்தான் 'ஜகத்'தானது (உலகமானது) எழுந்து கொள்கிறது. மனது அடங்கினால், 'ஜகத்'தும் மறந்துவிடுகிறது.

ஆக, இந்த 'ஜகத்'தை ஸ்ருஷ்டி பண்ணியது ப்ரஹ்மா இல்லை. இந்த மனதே. இந்த உலகில் ஸகலரோடும், பலவித காரியங்களுக்காக பழகி, இந்த மாயப்ரபஞ்சத்தில் வேண்டியதை ஸாதித்துக் கொள்வதே ஸ்திதி. ஒருவனுக்கு ஞானம் ஏற்பட்டது என்றால் இந்த மாயப்ரபஞ்சம் மொத்தமாக மறைந்து போய்விடுகிறது. இதுவே, ஸம்ஹாரம்.

ஆக மனதை கட்டுப்படுத்தி, எவனொருவன் மனதை நாசம் பண்ணிவிடுகிறானோ, அவனே ப்ரஹ்மா; அவனே விஷ்ணு; அவனே சிவன்; அவனே தேவன்; எல்லாம் அவனே. இப்படி மனதை நாசம் பண்ணாதவரையில், இந்த ப்ரபஞ்சத்தில் எத்தனையோ ஜன்மங்கள் எடுத்துக்கொண்டே இருக்க வேண்டியிருக்கும். ஆக, இந்த தத்துவத்தை அனுபவத்தில் கொண்டு வருவதே மிகவும் உயர்ந்தது.

பகவான் எங்கே? என்று வெளியே தேடாமல், அந்த பகவான் தனக்குள்ளேயே இருக்கிறான் என்பதை தேடிக் கண்டுபிடித்துக் கொள்ள வேண்டும். ''தானே காட்டுவாய் அருணாசலா'' என்றால் பகவானின் அனுக்ரஹத்தினால், இந்த பகவானின் ஸாக்ஷாத்காரம் பளீரென்று தானாக நமக்கு ஹ்ருதயத்தில் தெரிந்துவிடும். மற்றொரு விதத்தில் பார்த்தால், ஆத்மஸ்வரூபமாய் இருப்பதும், அந்த அருணாசலேஶ்வரனே. ஆதலால், ''அருணாசலேஶ்வரா, நீயே உன் ஸ்வரூபத்தை காண்பித்துக் கொடு'' என்று ப்ரார்த்திக்கிறார் ஸ்ரீ ரமண பகவான்.

(தொடரும்)

# செய்திகள்

### செப்டம்பர் - 14-ந் தேதி

ராதாஷ்டமியை ஒட்டி சென்னை ப்ரேமிகபவனத்தில் விசேஷ பஜனை நடைபெற்றது.

### செப்டம்பர் - 18-ந் தேதி — ஶ்ரவண த்வாதஶீ

காஞ்சி காமகோடி மடத்தில் நமது ஸாந்தீபனி குருகுல அறக் கட்டளையின் சார்பில் ஒவ்வொரு வருடமும் நடைபெறுவதுபோல் இந்த வருடமும் பிக்ஷா வந்தனம் நடைபெற்றது.

### செப்டம்பர் 21-ந் தேதி

நமது மாஹாண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸபெருமாள் திருக்கோயில் உத்ஸவமூர்த்தி ஸ்ரீ பக்தகுதூஹலன் புரட்டாசி சனிக்கிழமையை ஒட்டி மலைப்பட்டு கிராமத்திற்கு புறப்பாடு கண்டருளினார்.

---

இளம் வயதில் படிக்க ஸந்தர்ப்பம் கிடைத்தும் படிக்காமல் காலத்தை வீணாக்கியதை பிற்காலத்தில் உணர்ந்து வருந்தும் படியாக அமைந்துவிடும். செல்வம் இருக்கும்பொழுது அதை ஊதாரித்தனமாக செலவழித்தால் வறுமை வரும். அப்பொழுதுதான் செல்வத்தின் அருமை தெரியவரும். உடல் நன்றாக இருக்கும் பொழுது அதை நன்றாகப் பேணி காக்காமல் இருந்தால் பல நோய்கள் வரும். அப்பொழுதுதான் ஆரோக்கியத்தின் அருமை தெரியவரும். அதுபோல், மனிதப்பிறவி கிடைத்தும் அதை இறை வாழ்க்கையில் செலுத்தாவிட்டால் மரணத்திற்கு பிற்பாடு ஏற்படும் நிலையில் அதற்கு வருந்தும்படியாகிவிடும்.

- ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**அக்டோபர் 7-ந் தேதி முதல் 14-ந் தேதி வரை**

நவராத்திரியை ஒட்டி ஸ்ரீமத் ராமாயண நவாஹ பாராயணமும், ''ராதிகா ஶதகம்'' கீர்த்தனையும், பஜனையும் நடைபெறும்.

**அக்டோபர் 15-ந் தேதி — புரட்டாசி ஶ்ரவணம் - விஜயதசமி**

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளின் அவதார உத்ஸவமும் ஶ்ரவணதீபமும் நடைபெறும்.

## ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜெயந்தி மஹோத்ஸவம்

**நவம்பர் - 4-ந் தேதி - ஐப்பசி ஸ்வாதீ**

**நவம்பர் 1, 2, 3 தேதிகள்**

பாரதம் முழுவதிலுமிருந்து நாற்பது வித்வான்கள் கலந்து கொள்ளும் ''வாக்யர்த்த வித்வத் ஸதஸ்'' நடைபெறும்.

**நவம்பர் 4-ந் தேதி — ஸ்ரீஸ்வாமிகளின் திருநக்ஷத்ரம்**

நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| காலை 10 மணி | - | ஹோமங்கள் |
| மதியம் 2-மணி | - | அஷ்டாவதானம் |
| மாலை 5 மணி | - | ஸ்ரீ ''கதரி கோபால்நாத்'' அவர்களின் "Saxophone" கச்சேரி |

**நவம்பர் 5-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை**

நமது ஸாந்தீபனி குருகுல வித்யார்த்திகளின் யஜுர் வேத பத பாராயணம் நடைபெறும்.

**நவம்பர் 5-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை**

மாலை 7 மணி முதல் 9 மணி வரை Dr. வீழிநாதன் மற்றும் ஸ்ரீ மணி த்ராவிட் அவர்களின் ''சங்கரரும் அவருடைய க்ரந்தங்களும்'' என்ற தலைப்பில் ப்ரவசனம் நடைபெறும்.

**நவம்பர் 10-ந் தேதி**

''கல் வைத்த வாரம்'' நடைபெறும்.

**மங்களானி பவந்து**